**கவனிக்க.**– *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான காலி - பலபிட்டிய மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப் பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2121 - 2019 අප්‍රේල් මස 26 වැනි සිකුරාදා - 2019.04.26

*2121 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 906 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | 1014 |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1006 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**– *மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2019, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

905 - 81517 - 5403(2019/04)

# பதவிகள் - வெற்றிடம்

ஹபராதுவ பிரதேச சபை

**தென் மாகாண அரசாங்க சேவை பதவி வெற்றிடம்**

தென் மாகாண அரசாங்க சேவையில் ஹபராதுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு உரிய திகதிகளை பூர்த்தி செய்திருக்கும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள ஆண்/பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பள அளவுத் திட்டம் | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 01. | ஆயுர்வேத மருந்து கலவையாளர் III தரம் | 01 | PL2 -2016 | ரூபா 25,250.00-10 x 270-10 x 300- 10 x 330-12 x 350- ரூபா 38,450.00 | (i) க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.<br>(ii) மூன்று வருட தகுதிகாண் காலத்துக்குள் பதவிக்கு தொடர்பாக வக்வெல்ல முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் நடத்தும் மூன்று வருட தொழில் பயிற்சி பாடநெறிக்கான சான்றிதழ் பெறப்பட வேண்டும்.<br>(iii)தொடர்புடைய துறையில் மேலதிக அனுபவம் |
| 02. | அலுவலக அலுவல் உதவி யாளர் III தரம் | 02 | PL1 -2016 | ரூபா 24,250.00-10 x 270-10 x 300-10 x 330-12 x 350- ரூபா 36,410.00 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வு களுக்கு மேற்படாமல் இரண்டு (02) பாடங் களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03. | சாரதி III தரம் | 01 | PL3 -2016 | ரூபா 25,790.00-10 x 270-10 x 300-12 x 330-10 x 350- ரூபா 38,990.00 | (ii) க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) பாடங் களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(ii) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட மோட்டார் வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரம் (கனரக வாகனங்களுக்கு) அனுபவம் தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அந்த அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். |

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பள அளவுத் திட்டம் | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 04. | நூலக உதவி யாளர் III தரம் | 02 | PL1 -2016 | ரூபா 24,250.00-10 X 250-10 X 270-10 X 300-12 X 330- ரூபா 36,410.00 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரு அமர்வு களுக்கு மேற்படாமல் இரண்டு (02) பாடங் களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 05. | வேலை/கள தொழிலாளர் | 04 | PL1 -2016 | ரூபா 24,250.00-10 X 250-10 X 270-10 X 300-12 X 330- ரூபா 36,410.00 | 08 ஆம் வகுப்பு (09 ஆம் ஆண்டு) சித்தி யடைந்திருத்தல் |
| 06. | சுகாதார தொழிலாளர் | 04 | PL1 -2016 | ரூபா 24,250.00-10 X 250-10 X 270-10 X 300-12 X 330- ரூபா 36,410.00 | 08 ஆம் வகுப்பு (09 ஆம் ஆண்டு) சித்தி யடைந்திருத்தல் |

**02. வயது எல்லை :**

விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது)

**03. பொது தகுதிகள் :**

(i) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருட காலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (அதை பற்றி வாக்கெடுப்பு பெயர்ப் பட்டியல் அல்லது பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட சான்றிதழில் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.)

(iii) விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) தண்டனைச் சட்டக் கோவையின் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது. (அதைப்பற்றிய பொலிஸ் அறிக்கை)

(v) விண்ணப்பதாரர்கள் உரிய பதவிக்கு முன் குறிப்பிட்டு இருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (ஹபராதுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வதிவாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**04. பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன் பின் அல்லது கால எல்லைக்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை இரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு ஹபராதுவ பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 மாதத்திற்குள் அரச வைத்திய பரிசோதனைக்கு உட்பட்டிருப்பதுடன் அந்த பரிசோதனையில் உடல் நல சம்பந்தமாக தகுதியற்றவராக காணப்படின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும்.

**05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. உங்களுக்குரிய ஓய்வூதிய முறைமை தபுதாரர்கள்/அநாதைகள், சம்பந்தமாக எதிர்காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கைகளுக்கு தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும். விதவைகள் /அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யதல் வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 ஆண்டுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அந்த காலத்திற்கு வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமாக இருக்கும் ஆயின் மாத்திரம் தகுதிகாண் காலம் முடிவில் சேவை நிரந்தரம் செய்ய முடியும்.

**06. ஆட்சேர்க்கும் நிபந்தனை :**

இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கூடுதலாக இலங்கைக் குடியரசின் தாபன ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் அரசாங்க திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபை, தென் மாகாண அரசாங்க ஆணைக்குழு அவ்வப்போது திணிக்கப்படும் கட்டளைகளுக்கும் முறன்பாடற்றவாறு செயற்படுவதற்கு சகல சேவையாளரும் உட்பட்டவர்களாவார்.

**07. ஆட்சேர்க்கும் முறை :**

தகைமை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**08. நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் முறை :**

(i) தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சி தாபனம் கனிஷ்ட சேவை ஆரம்ப தொழில்நுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கல் முறையை அடிப்படையாக கொண்டதாகும்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. | தொழில்முறை தகுதிகள் | 10 | |
| 3. | அனுபவம் | 10 | |
| 4. | பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் வதிவுக்கு | 45 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

(ii) தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சி தாபனம் கனிஷ்ட சேவை ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் ஆட்சேர்ப்புக்கான நேர் முகப் பரீட்சை

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாக கொண்டதாகும்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. | தொழில்முறை தகுதிகள் | 10 | |
| 3. | அனுபவம் | 10 | |
| 4. | பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் வதிவுக்கு | 45 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

(iii) சாரதி

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளி வழங்குப் முறையை அடிப்படையாக கொண்டதாகும். இந்த சேவை வகை நடத்தப்படும் அனைத்து நியமனங்களும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வழங்கும் ஏற்பாடுகளுடன் மட்டுமே இணைந்து செயற்படுத்த வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் முறை பின்வருமாறாகும் :-

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1. | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சாதாரண சித்தியடைந்திருத்தல் | புள்ளி 8X1 = புள்ளி 8 |
| 2. | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச் சித்தியடைந்திருத்தல் | புள்ளி 8X2 = புள்ளி 16 |
| 3. | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | புள்ளி 4 |
| 4. | தொழில் தொடர்பான அறிவு | புள்ளி 10 |
| 5. | நேர் முகப் பரீட்சையில் காட்டும் திறமை | புள்ளி 5 |
| 6. | தொழில் தொடர்பான பயிற்சி மற்றும் சேவை அனுபவம் பெற்றிருத்தல் | புள்ளி 15 (ஒரு முறைக்கு 2 புள்ளிகள் வீதம்) |
| | மொத்தப் புள்ளிகள் | புள்ளி 50 |

நேர்முகப் பரீட்சைக்காக 50 % கிடைக்கப் பெறுவதுடன் சித்தி பெற்றிருந்தால் 40% உம் (புள்ளி 20 அல்லது அதற்கு மேல்) பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தொழில் சார்ந்த பரீட்சை

தொழில் சார்ந்த நேர்முகப் பரீட்சைக்காக 50% புள்ளிகள் வழங்கப்படும். சித்தி பெறுவதற்கு 40% (புள்ளிகள் 20 அல்லது அதற்கு மேல்) பெற்றிருந்தல் வேண்டும்.

09. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** :

விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியை இணைக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையில் சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் ஆளடையான அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. கல்விச்சான்றிதழ்/பாடசாலையில் இருந்து விலகும் சான்றிதழ்;
3. பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (உரிய பிரதேச செயலாளரின் கையொப்பமிடப்பட்ட 06 மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்);
4. சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு;
5. தொழில் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்;
6. குறற்றவியல் குற்றம் தொடர்பாக இது வரை சட்ட நீதிமன்றத்தில் குற்றவாளி இல்லை என்றும் அவ்வாறான குற்றம் தொடர்பாக தற்போது எந்தவொரு விசாரணையும் இல்லை என்று பொலிஸ் சான்றிதழ்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளில் இந்த தாபனத்தில் தற்காலிக/அமைய/ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் விண்ணப்பதாருக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் 2019.05.31 ஆந் திகதிக்கு அல்லது அத் திகதிக்கு முன் "தலைவர், பிரதேச சபை, ஹபராதுவ" என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு " ........................ ஆட்சேர்க்கும் விண்ணப்பப்பத்திரம்" என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

உதாரணம் - சாரதி பதவிக்காக ஆட்சேர்க்கும் விண்ணப்பப்பத்திரம்

(விண்ணப்பப்பத்திரம் A4 அளவுடைய கடதாசியில் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரைகளுக்கு முறன்பாடான அல்லது முழுமையற்ற விண்ணப்பப்பத்திரம் ஏதேனும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.)

தற்போது அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரி தமது தாபனத் தலைவர் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த அறிவிப்பில் சிங்கள, தமிழ், ஆங்கிலம் மொழிகளுக்கிடையில் வேறுபாடு ஏற்படின், சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

10. இந்த விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன் பின் அல்லது அதற்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இந்த அறிவிப்பை இரத்து செய்தல் அல்லது மாற்றம் செய்தல் ஆகியவற்றிக்கு அதிகாரம் ஹபராதுவ பிரதேச சபை தலைவருக்கு உரியது.

தலைவர்,
ஹபராதுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹபராதுவ,
2019, ஏப்பிறல் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென்மாகாண அரசாங்க சேவை ஹபராதுவ பிரதேச சபை**

........................................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் முழுப்பெயர் : ....................................................................................

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ...........................................................................

3. நிரந்தர விலாசம் : ..................................................................................................

4. மாவட்டம் : ........................................................

5. பிறந்த திகதி : வருடம் : ..................... மாதம் : ..................... திகதி : .....................

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

7. பால் : - ( ஆண்/பெண்) : ..........................................................................................

8. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு இறுதி திகதிக்கு வயது :
வருடங்கள் : .................. மாதங்கள் : ............... நாட்கள்:.....................

9. திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி : .........................................................................

10. இனம் : ............................................................................

11. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், பரம்பரையாகவா ? பதிவு முறையிலா ? என்று குறிப்பிடுக :
..............................................................................................................

12. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :

(i) சித்தியடைந்த ஆண்டு /தரம் : .......................................................

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சை :

சுட்டெண் :.......................... ஆண்டு : .............................

சித்தியடைந்த பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க.பொ.த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறு: ..............................

சுட்டெண் : ........................... ஆண்டு : ..............................

சித்தியடைந்த பாடங்கள்

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

13. தொழில் மற்றும் வேறு தகைமை விபரம் : (சான்றிதழ்களின் பிரதியை இணையுங்கள் )

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

14. சேவை அனுபவம் :

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

15. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் :

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

16. நீர் தற்போது இந்த தாபனத்தில் நிரந்தர/அமய தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இருப்பவராயின் அந்தச் சேவை காலம் மற்றும் விபரம் நியமன தன்மை (நிரந்தர/அமய/தற்காலிக/ஒப்பந்தம்) சேவைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

17. வேறு தகுதி (சான்றிதழ் இருப்பின் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள தகல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் வெளிப்படுத்தப்பட்டால் நான் தகைமையற்றவன் ஆவேன் என் பதவியும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எதுவித இழப்பீடும் செலுத்தாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

..................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

18. தற்பொழுது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ........................................................ தற்போது .............................. இத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .......................................................... ஆக பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்பட வில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

..................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :.................................

04- 925

**தென்மாகாண அரசாங்க சேவை பதவி வெற்றிடங்களை நிரப்புதல்**

வெலிவிடி திவிதுர பிரதேச சபை

தென் மாகாண அரசாங்க சேவையில் வெலிவிடி திவிதுர பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு உரிய தகுதிகள்பூர்த்தி செய்திருக்கும் தென் மாகாணத்தினுள் நிரந்தர பதிவுடையஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவியின் பெயர் | சேவை பிரிவு/ தரம் | பதவி வெற்றிடம் | சம்பளக் குறியீடு | சம்பள அளவு | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|---|
| 01 | சாரதி தரம் III | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெற்ற III தரம் | 01 | PL 3 - 2016 | ரூபா 25,790.00 - 10X270-10X300-10X330-12X350-ரூபா 38,990.00 | க. பொ. த. (சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஒரே அமர் வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல்<br><br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வெளி யிடப்பட்ட மோட்டர் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் அனுபவம் தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அந்த அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 02 | வேலை /கள தொழிலா ளர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 02 | PL 1 - 2016 | ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00 | 08 ஆம் வகுப்பு (09 ஆம் ஆண்டு) சித்தி யடைந்திருத்தல் |
| 03 | காவலர் | ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத III தரம் | 01 | PL 1 - 2016 | ரூபா 24,250.00-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410.00 | க. பொ. த. ( சா./ த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |

02. **வயதெல்லை:-**

(i) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச நிலை வயது பற்றிய பாதிப்பு ஏற்படாது.

03. **பொதுத் தகுதிகள்:-**

(i) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருட காலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். வெலிவிடி திவிதுர பிரதேச செயலாளர் பிரிவில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர் நன்நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

(iv) விண்ணப்பதாரர்கள் உரிய பதவிக்கு முன், குறிப்பிட்டு இருக்கும் தகமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **பொது நிபந்தனை :**

(i) விண்ணபப்பத்திரம் கோரபப்பட்ட தன் பின் அல்லது கால எல்லைக்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பை தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை ரத்து செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு வெலிவிடிய பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணபதாரர் 03 மாதத்திற்குள் அரசாங்க வைத்திய பரிசோதனைக்கு உட்படுவதுடன் அந்த பரிசோதனையின் உடல் நலம் சம்பந்தமாக தகுதியற்றவராக காணப்படின் நியமனங்கள் இரத்து செய்யப்படும்.

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :-**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) ஓய்வூதிய உரித்துடையது. ஓய்வூதிய முறைமை சம்பந்தமாக எதிர்காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் நீர் கீழ்படிதல் வேண்டும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணபதாரர் 03 வருடங்கள் தகுதிகாண் காலத்துக்கு உட்படுவர். வருகை மற்றும் நடத்தை திருப்திகரமாக இருப்பின் தகுதிகாண் கால முடிவில் சேவை நிரந்தரம் செய்யப்படும். தற்போது அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் இருப்பவர்கள் ஒரு வருட காலம் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கூடுதலாக இலங்கைக் குடியரசின் தாபன ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் அரச திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபை தென் மாகாண அரசாங்க ஆணைக்குழு அவ்வப்போது திணிக்கப்படும் கட்டளைகளுக்கும் முறன்பாடற்றவாறு செயற்படுவதற்கு சகல சேவையாளரும் உட்பட்டவர்களாவார்

06. **ஆட்சேர்க்கும் முறை :-**

(i) குறிப்பிட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணபதாரர் நேர்முக பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

07. **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை :-**

(i) கனிஷ்ட சேவக ஆரம்ப தொழில்நுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் ஆட்சேர்ப்புக்காக நேர்முகப் பரீட்சை.

(ii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் புள்ளி செயல் முறை அடிப்படையாக கொண்டதாகும்.

| | புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய துறை | உச்ச புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1 | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சாதாரண சித்தியடைந்திருத்தல் | புள்ளி (8X1) = புள்ளி 8 |
| 2 | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் திறமைச் சித்தியடைந்திருத்தல் | புள்ளி (8X2) = புள்ளி 16 |
| 3 | க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | புள்ளி04 |
| 4. | தொழில் தொடர்பான அறிவு | புள்ளி 10 |
| 5. | நேர் முக பரீட்சையில் காட்டும் திறமை | புள்ளி 05 |
| 6. | தொழில் தொடர்பான பயிர்ச்சி மற்றும் சேவை அனுபவம் பெற்றிருத்தல் | புள்ளி 15 (ஆண்டுக்கு புள்ளி 02 படி) |
| | முழுத் தொகை<br>சித்தியடைவதற்காக 40% க்கு (20 புள்ளிகள்) மேல் பெற்றிருத்தல் வேண்டும் | புள்ளி 50 |

(iii) தொழில் திறமை பரீட்சை :

இங்கு தொழிலுடன் தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும். முழுப் புள்ளி 50, சித்தி அடைவதற்கு 40% (புள்ளி 20) பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத உத்தியோகத்தர் சேவை

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு கருத்தில் கொள்ள குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| கல்வித் தகைமை | 30 | 50% |
| தொழில்முறை தகுதிகள் | 10 | |
| அனுபவம் | 10 | |
| பிரதேச சபை வதிவாளருக்கு | 45 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| மொத்தம் | 100 | |

குறிப்பு - அடிப்படை தகுதிகளை பரிசோதித்தல் - கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை அடிப்படையாக கொண்டதாகும்.

08. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ் மொழிகளுக்கிடையில் வேறுபாடு ஏற்படின், சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

10. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** :

இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமை உள்ளடக்கியவாறு 12" x 8" (A4) அளவுடைய கடதாசியில் இரு பக்கத்தையும் உபயோகித்து தன்னால் தயாரித்த விண்ணப்பப்பத்திரத்தை 2019.05.26 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன் "செயலாளர், வெலிவிடி பிரதேச சபை அகலிய, பத்தேகம" என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரை களுக்கு முறண்பாடான அல்லது முழுமையற்ற விண்ணப்பப்பத்திரம் ஏதேனும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்பத்திரத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதியை இணைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது மூலப்பிரதிகள் மற்றும் ஆளடையாளஅட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;
(ii) ஆளடையாள அட்டையின் பிரதி;
(iii) கல்விச் சான்றிதழ் /பாடசாலை விலகல் சான்றிதழ்;
(iv) பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (உரிய பிரதேச செயலாளர் கையொப்பமிடப்பட்ட 06 மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்);
(v) சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு;
(vi) தொழில் மற்றும் சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்;
(vii) குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் இது வரை நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்ப்பிடப்படவில்லை என்றும் அவ்வாறான குற்றம் தொடர்பாக தற்போது எந்தவொரு விசாரணையும் இல்லை என பொலிஸ் சான்றிதழ்.

தலைவர்,
வெலிவிடி திவிதுர பிரதேச சபை.

வெலிவிடி திவிதுர பிரதேச சபை அலுவலகம்
2019, ஏப்பிறல் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெலிவிடி திவிதுர பிரதேச சபை**

....................................... பதவி

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-..........................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :- ...............................................................................

03. நிரந்தர வதிவிட முகவரி :- ..........................................................................................

04. தொலைபேசி இலக்கம் :- ..........................................................................................................

05. மாவட்டம் :-..........................................................................................................................

06. பிறந்த திகதி :- ..........................................................................................................

ஆண்டு : ........................ மாதம் : .......................................... திகதி : ...........................

07. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ........................................................................................

08. விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் இறுதி நாளன்று வயது :

வருடங்கள் : ...........................மாதங்கள் : ........................................நாட்கள் :............................

09. பால் (ஆணா/பெண்ணா) :..............................................................................................

10. குடியியல் நிலை (விவாகமானவரா /விவாகமாகாதவர்) என்ற விபரம் :
........................................................................................................................................

11. இனம் : ...........................................................................................................................

12. நீர் இலங்கைப் பிரசையா (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா என்பதை குறிப்பிடுக :
...................................................................................................

13. கல்வித் தகைமை: ...........................................................................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

14. அனுபவம் மற்றும் தொழில் தகைமை : .........................................................................

15. நீர் தற்போது வெலிவிடி திவிதுர பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :

தற்போது வகிக்கும் பதவி : ..................................................................

அந்தப் பதவி கிடைத்த திகதி : ..........................................................................

அந்த நியமனத் தன்மை (நிரந்தர/அமய/தங்காலிக/ஒப்பந்தம்) : ..................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் வெளிப்படுத்தப்பட்டால் நான் தகைமையற்றவன் ஆவேன் என்றும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எந்தவித இழப்பீடும் இல்லாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ..............................

15. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி .................................................. தற்போது இத் திணைக்களத்தில் / நிறுவனத்தில் பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டணைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் படிவத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி ..............................

04 - 830

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**தெவுந்தறை பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) (ஆ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் சரத்தின்படி தென் மாகாண சபை மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறை பிரதேச சபையினால் இங்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வரைபடத்தின் இலக்கம் 133/2019 இன் கீழ் குறித்த வீதிகளை தெவுந்தறை பிரதேச சபைக்குரிய வீதிகளாக விளம்பரப்படுத்தப்படுவதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.


02. தற்போது பிரதேச சபையினால் அளந்து குறியிடப்பட்ட இந்த வீதிகள் தொடர்பாக குறித்த காணிகளின் உரித்தாளர்களாக உரிமைகோருபவர்களிடமிருந்து ஏதாவது மறுப்புக்கள் தெரிவிப்பதாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரத்தில் வெளிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திக்குள் தனக்குரிய உரிமையை அத்தாட்சிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின்படி செயற்படும்படியும், இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

இக்கால வரையறைக்குள் ஏதும் மறுப்புக்கள் முன் வைக்கப்படாவிடத்து, கீழ் குறித்த வீதிகள் தெவுந்தறை பிரதேச சபைக்குரிய வீதிகள் என ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படுவதாக வெளிப்படுத்தப்படும் என இத்தால் மூலம் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சுஜீவ வெதகே,
தலைவர்,
தெவுந்தறை பிரதேச சபை.

வதுர தெனிய புரான விகாரை பிரவேச வீதி

| வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | இறுதி | வீதியின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது புற காணி உரிமையாளரின் பெயர் | வீதியின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது புற காணி உரிமையாளரின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் இலக்கமும் | வீதியின் நீளம் அடி அளவில் | வீதியின் அகலம் அடி அளவில் | வீதியின் வரைபடம் உரிய வரைபடத் தின்படி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வதுர தெனி புரான ரஜமகா விகாரை | மாகாண சபை வீதி பிரதேச சபை வாகன தரிப்பிடத்திற்கு அருகில் | மலபலாவல வீதிக்கு ஆரம்பம் வரை | பாலுவத்த காணி வதுரதெனிய விகாரை காணி | பிரதேச சபை வாகனத் தரிப்பிட காணி முற்பள்ளிக்கான காணி சிறி உபதிஸ்ஸ பரிவெனாவின் காணி | கபுகம மேற்கு 435 | 175 மீற்றர் | 05 மீற்றர் | 133/2019 |




04-733

---

**ரிதீகம பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் படி வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச சபையினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 2358 ஆம் இலக்கத் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தெருக்களை ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக பிரசுரிப்பதற்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

02. தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு புள்ளியிடப்பட்டுள்ள இத் தெருக்கள் பற்றி உரிய காணி உரிமையாளர்களாக உரிமை கோருபவர்களினால் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிப்பார்களேயானால் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு மாத காலத்தினுள் தமது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் படி செயற்படுத்துமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

03. இக்காலத்தினுள் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தெருக்கள் ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படும் என்று பொது மக்களின் கவனத்திற்காக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

கே. வில்பட் குலதுங்க,
தலைவர்,
ரிதீகம பிரதேச சபை

ரிதீகம பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம,
2018, ஒற்றோபர் 18.

**பஹலகம்மெத்த கிராமத்தின் மத்தியிலான பாதை**

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | இறுதி | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது பக்க காணி உரிமையாளர்களின் பெயர் | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது பக்க காணி உரிமையாளர்களின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | பாதையின் நீளம் அடி | பாதையின் அகலம் அடி | பாதை வரைவு உரிய திட்ட இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பஹலகம்மெத்த கிராமத்தின் மத்தியிலான பாதை | திரு. ஜீ.ஜீ. சிறிசேன அவர்களின் காணியின் அருகில் | திரு. டப்.ஜீ. விக்ரமசிங்ஹ அவர்களின் காணி | 1. திரு. ஜீ.ஜீ.சிறிசேன<br>2. திரு. ஏ.ஜீ.அமரசூரிய<br>3. திரு. டப்.ஜீ. ஜயசிங்ஹ<br>4. திருமதி கே.டீ. அனுலாவதி | 1. திரு. ஜீ. ஜீ. சோமதேவ<br>2. திரு. பி.டீ. விஜேரத்ன<br>3. திரு. டப்.ஜீ. விக்ரமசிங்ஹ | 574 பம்பரகஹகந்த | 416 அடி | 08 அடி | 2358 |

04-926

---

**ரிதீகம பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் படி வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச சபையினால் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள 2353 ஆம் இலக்க திட்டத்தின் கீழ், கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு தெருக்களை ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக பிரசுரிப்பதற்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

02. தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு புள்ளியிடப்பட்டுள்ள இத் தெருக்கள் பற்றி உரிய காணி உரிமையாளர்களாக உரிமை கோருபவர்களினால் ஏதாவதொரு எதிர்ப்புத் தெரிவிப்பார்களேயானால் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்தினுள் தமது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின்படி செயற்படுத்துமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

03. இக் காலத்தினுள் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தெருக்கள் ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படும் என்று பொது மக்களின் கவனத்திற்காக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

கே. வில்பட் குலதுங்க,
தலைவர்,
ரிதீகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம,
2018, ஒற்றோபர் 18.

கொஸ்கஹமுல ஹேன பாதை

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | இறுதி | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது பக்கக் காணி உரிமையாளரின் பெயர் | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது பக்க காணி உரிமையாளரின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | பாதையின் நீளம் அடி | பாதையின் அகலம் அடி | பாதையின் வரைபடம் உரிய திட்ட இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொஸ்கஹமுல ஹேன பாதை | திரு. எஸ்.டீ. ஜயதிலக அவர்களின் வீட்டின் அருகில் | திரு. .எஸ்.எம். குலதுங்க அவர்களின் காணியினால் | 1. திரு. எஸ்.டீ. ஜயதிலக<br>2. திரு. எம்.டீ. குணசிங்ஹ<br>3. திரு. என்.ஜீ. சுனில் பிரேமரத்ன<br>4. திரு. எம்.டப்.ஜீ. கபுகே<br>5. திரு. டப்.ஏ. வீரசிங்ஹ<br>6. கொரகதொல வத்த | 1. திருமதி எச்.ஏ. நந்தாவதி<br>2. திரு. எம்.டீ. குணசிங்ஹ<br>3. திரு. என்.ஜீ. சுனில் பிரேமரத்ன<br>4. திரு. எம்.டப்.ஜீ. கபுகே<br>5. திரு. டப்.ஏ. வீரசிங்ஹ<br>6. திரு. டீ.எம். திஸ்ச<br>7. திரு. டப்.ஏ. குணபால<br>8. திரு. டப்.ஏ.எஸ். ரத்னாயக்க<br>9. திருமதி எஸ்.எம். அனுலாவதி<br>10. திரு. எஸ்.எம். கருணாரத்ன<br>11. திரு. எஸ்.எம். குலதுங்க | 534 கட்டியாவ | 2233 அடி | 10 அடி | 2353 |

04-927

## ரிதீகம பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் படி வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 7794 ஆம் இலக்க திட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தெருக்களை ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக பிரசுரிப்பதற்கு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*02. தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு புள்ளியிடப்பட்டுள்ள இத் தெருக்கள் பற்றி உரிய காணி உரிமையாளர்களாக உரிமை கோருபவர்களினால் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிப்பார்களேயானால் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்தினுள் தமது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின்படி செயற்படுத்துமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*03. இக் காலத்தினுள் ஏதாவதொரு எதிர்ப்பு தெரிவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தெருக்கள் ரிதீகம பிரதேச சபைக்குரிய தெருக்களாக ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படும் என்று பொது மக்களின் கவனத்திற்காக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*கே. வில்பட் குலதுங்க,*
*தலைவர்,*
*ரிதீகம பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரிதீகம,*
*2018, ஒற்றோபர் 18.*

---

### கவிசிகமுவ சூரிய மாவத்தை

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | இறுதி | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது பக்கக் காணி உரிமையாளரின் பெயர் | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது பக்கக் காணி உரிமையாளரின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | பாதையின் நீளம் அடி | பாதையின் அகலம் அடி | பாதையின் வரைபடம் உரிய திட்ட இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| கவிசிகமுவ சூரிய மாவத்தை | தெதுருஓய அணைக்கட்டிற்கு செல்லும் பாதை | திரு. ஏ.ஏ. நிசாந்த அதத்சூரிய அவர்களின் காணி | 1. திரு. ஏ.ஏ.காமிணி நிமல் விக்ரமதிலக உரிமைகோரும் காணி<br>2. திருமதி ஏ.ஏ.புஸ்பா ரங்ஜனீ உரிமைகோரும் காணி<br>3. திரு. ஏ.ஏ.லயனல் விஜேசூரிய உரிமைகோரும் காணி<br>4. திரு. ஏ.ஏ.குணதிலக உரிமைகோரும் காணி<br>5. திருமதி கே.சிறியானி பந்துலதா உரிமைகோரும் காணி | 1. திரு. டீ.எம்.ருவன் விபுல திசாநாயக்க உரிமைகோரும் வயல் காணி<br>2. திரு. ஏ.ஏ. விஜேசேகர உரிமைக்கோரும் வயல் காணி<br>3. திரு. ஏ.ஏ.சாந்த குமார அதத்சூரிய உரிமைக்கோரும் வயல் காணி<br>4. திருமதி டப்.எம். டிகிரி குமாரி | 610 கவிசிகமுவ | 556 அடி | 10 அடி | 7794 |

**கவிசிகமுவ சூரிய மாவத்தை** (தொடர்ச்சி)

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | இறுதி | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை இடது பக்கக் காணி உரிமையாளரின் பெயர் | பாதையின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை வலது பக்கக் காணி உரிமையாளரின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | பாதையின் நீளம் அடி | பாதையின் அகலம் அடி | பாதையின் வரைபடம் உரிய திட்ட இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6. திரு ஏ.ஏ.சமன்குமார அதத்சூரிய உரிமை கோரும் காணி<br>7. திரு ஏ.ஏ.சாந்த அதத்சூரிய உரிமைக் கோரும் காணி<br>8. திரு ஏ.ஏ.நிசாந்த குமார அதத்சூரிய உரிமைகோரும் காணி | உரிமைகோரும் வயல் காணி<br>5. திருமதி ஏ.ஏ.புஸ்பா ரங்ஜனீ உரிமைகோரும் வயல் காணி<br>6. திரு ஏ.ஏ.நிமல் விக்ரமதிலக உரிமைகோரும் வயல் காணி | | | | |

04-928

---

**நொச்சியாகம பிரதேச சபை**

2019 ஆம் ஆண்டுக்காக பொழுது போக்கு வரி கட்டளைச் சட்டம்

நொச்சியாகம பிரதேச சபையினால் பொழுது போக்கு வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் சரத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கீழ் கானும் பிரேரனை 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி தீர்மான இலக்கம் 54 ன் கீழ் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஆர்.பி. குனரத்ன.
தலைவர்
நொச்சியாகம பிரதேச சபை

நொச்சியாகம பிரதேச சபை அலுவலகத்தில்
2018, யூலை மாதம் 10.

**தீர்மானம்**

*267 ஆம் அதிகாரமான பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (i) ஆம் உப பிரிவின் கீழ் இந்தச் சபையினால் சபையின் பரிபாலன எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேசங்களில் நடைபெறுகின்ற (பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம்) பொழுது போக்கு விடயங்களுக்காக நுழைவதற்காக அறவிடப்படும் கட்டணங்களின் 20% வீதமான வரியை இந்த பிரேரணை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து நியமித்து அறவிடப்படுதல் வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.*

*04-114*

---

**அக்குறணை பிரதேச சபை**

*மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக்கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய துணை விதிகள்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ( ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள் ) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையப் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள முன்மொழிவு 2019.03.12 ஆந் திகதி நடத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தில் 5:1:7 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஐ. எம். இஸ்திஹார்,*
*தவிசாளர்,*
*அக்குறணை பிரதேச சபை,*
*அலவத்துகொட.*

*அக்குறணை பிரதேச சபை அலுவலகம்.*
*அலவத்துகொட,*
*2019, மாச்சு 29.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, 261 ஆவது அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2018.09.25 ஆந் திகதியையும் 2090/4 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக்கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய துணை விதிகளை, இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அக்குறணை பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் செயற்படுத்தவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2019, மாச்சு மாதம் 12 ஆந் திகதி கொண்ட சபையின் 5:1:7 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*04-1115*

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**பிங்கிரிய பிரதேச சபை**

*நிதி கூற்றினை பிரசித்தப்படுத்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1988 ஆம் ஆண்டு பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) சட்டத்தின் 216 ஆம் ஏற்பாடுகளுக்கமையும் வண்ணம் கீழ்க் காணப்படும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கணக்காய்வு செய்வதற்கு உள்ள பிங்கிரிய பிரதேச சபையின் 2018.12.31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக நிதி நடவடிக்கைக் கூற்று மற்றும் 2018.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலைக் கூற்று பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*ஏ. ஏ. ஜயசிறி,*
*செயலாளர்,*
*பிரதேச சபை,*
*பிங்கிரிய*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பிங்கிரிய,*
*2019, மாச்சு 25.*

**அட்டவணை 1**

*பிங்கிரிய பிரதேச சபை*

*2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் ஆண்டிற்கான*
*நிதி நடவடிக்கைக் கூற்று*

| | குறிப்பு | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| இயக்க வருமானம் | | | |
| அரசின் பங்களிப்பு - மீள்வருவன | 01 | 49,363,518.70 | 43,230,335.17 |
| வருமானம் | 02 | 58,385,861.98 | 48,568,818.83 |
| மொத்த இயக்க வருமானம் | | **107,749,380.68** | **91,799,154.00** |
| இயக்க செலவு | | | |
| மீள்வரும் செலவு | 03 | 78,612,184.26 | 78,341,538.39 |
| மொத்த இயக்க செலவு | | **78,612.184.26** | **78,341,538.39** |
| ஆண்டிற்காக இயக்க அதிகபடியான | | **29,137,196.42** | **13,457,615.61** |
| மூலதன கிடைப்பனவு | 04 | 27,802,117.05 | 26,698,981.76 |
| மூலதன செலவு | 05 | 42,713,438.19 | 57,699,503.00 |
| ஆண்டிற்கான அதிகபடியான/குறைபாடு | | **14,225,875.28** | **(17,542,905.63)** |

**அட்டவணை 2**

பிங்கிரிய பிரதேச சபை

2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் ஆண்டிற்கான
நிதி நடவடிக்கைக் கூற்று

| **சொத்துக்கள்** | குறிப்பு | 2018.12.31 | 2017.12.31 |
|---|---|---|---|
| நிலையற்ற சொத்துக்கள் | | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | 06 | 273,062,534.82 | 249,841,087.95 |
| **தற்போதைய சொத்துக்கள்** | | | |
| மொத்த | 07 | 2,390,844.99 | 1,981,105.76 |
| பணியாளர்களின் கடன் மற்றும் முற்பணம் | 08 | 10,712,598.57 | 11,334,520.44 |
| கிடைக்க வேண்டியவை | 09 | 53,766,832.93 | 73,020,401.04 |
| முதலீடு | 10 | 44,582.28 | 42,980.37 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | 11 | 13,567,796.62 | 21,971,544.64 |
| | | 80,482,655.39 | 108,350,552.25 |
| மொத்த சொத்துக்கள் | | 353,545,190.21 | 358,191,640.20 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நிலையற்ற பொறுப்புக்கள் | 12 | 5,839,189.79 | - |
| தற்போதைய பொறுப்புக்கள் | 13 | 35,994,480.11 | 69,272,759.84 |
| உரிமைகள் | 14 | 311,711,520.31 | 288,918.880.36 |
| மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் | | 353,545,190.21 | 358,191,640.20 |

04-714